**தேனி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) அவர்களின் செயல்முறை ஆணைகள்.**

**பிறப்பிப்பவர் : திருமதி.கி.சிந்து, எம்.ஏ.,**

ந.க. அ2/19787/2021 நாள் : .05.2024

| | | |
|---|---|---|
| பொருள்:- | | கருணை அடிப்படையில் பணிநியமனம் – தேனி மாவட்ட வருவாய் அலகு – தேனி முன்னாள் உதவியாளர் – திரு.ஆர்.தங்கம் என்பவர் பணியின் போது 17.03.2006 அன்று காலமானது – மகள் – செல்வி.த.பத்மபிரியா – கருணை அடிப்படையில் வருவாய் இளநிலை ஆய்வாளர் நிலையில் பணிநியமனம் - 14.12.2022 பி.ப. பணியேற்பு செய்தது – 14.12.2022 பிற்பகல் பணிவரன்முறைசெய்து ஆணையிடப்படுகிறது. |
| பார்வை: | 1. | திருமதி.த.வாசுகி, க/பெ.(லேட்) ஆர்.தங்கம், 40A,G.H.ரோடு, தேனி என்பவரின் மனு, நாள்.10.04.2006. மற்றும் 01.06.2010 |
| | 2. | இவ்வலுவலகக் குறிப்பாணை ந.க.எண்.அ2/26347/2009, நாள்.03.04.2013. |
| | 3. | சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை W.P.(MD).No.6590/13, நாள்.03.01.2018. |
| | 4. | இவ்வலுவலகக் குறிப்பாணை ந.க.எண்.அ2/6434/2018, நாள்.19.03.2018. |
| | 5. | திருமதி.த.பத்மபிரியா, த/பெ.ஆர்.தங்கம், 14-13-16 மேலமந்தை தெரு, வத்தலகுண்டு, திண்டுக்கல் மாவட்டம் என்பவரின் மனு, நாள்.17.09.2018. |
| | 6. | சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை WA(MD)No..448/2018, நாள்.10.06.2021. |
| | 7. | மாவட்ட ஆட்சித்தலைவர், தேனி அவர்களின் கடிதம் ந.க.எண்.அ2/19787/2021 நாள்.18.10.2021 |
| | 8. | அரசுத்தேர்வுகள் உதவி இயக்குநர், தேனி கடிதம் ந.க.எண்.000010/அ4/2021, நாள்.25.10.2021. |
| | 9. | அரசாணை (3டி) எண்.95 வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத் துறை, பணி-9(2)பிரிவு, நாள்.25.10.2022 |
| | 10. | தேனி மாவட்ட ஆட்சித்தலைவரின் செயல்முறை ஆணைகள் ந.க.எண்.அ2/19787/2 0 2 1 நாள் 08.12.2022. |
| | 11. | தேனி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது)-இன் செயல்முறை ஆணைகள் ந.க.எண். அ/10/2022 நாள் 14.12.2022. |
| | 12. | இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதம் நாள்.11.12.2023 |
| | 13. | அரசுக்கடிதம் எண் G2/202/5532மனிதவள் மேலாண்மைத் 20.09.2023 G) துறை நாள்) |
| | 14. | அரசுக் கடித (1 டி) எண் 900 வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை பணிகள் அலகு, பணி-9(1) பிரிவு நாள் - 26.12.2023 |
| | 15. | சென்னை கூடுதல் தலைமைச் செயலர் மற்றம் வருவாய் நிருவாக ஆணையர் கடிதம் |

| | | |
|---|---|---|
| | | ஆ.கு3/4600/2024 நாள் 20.02.2024 |
| | 16. | தொடர்புடைய ஆவணங்கள்.<br>((((())))) |

**ஆணைகள் :**

தேனி மாவட்ட வருவாய் அலகில், தேனி வட்டாட்சியர் அலுவலகத்தில் உதவியாளராகப் பணிபுரிந்து பணியிடையே கடந்த 17.03.2006 அன்று காலமான திரு.ஆர்.தங்கம் என்பவரின் மகள் செல்வி.த.பத்மபிரியா என்பவருக்கு, பார்வை 9-இல் காணும் அரசாணையின்படியும் மற்றும் இதர தகுதிகளின் அடிப்படையிலும் பார்வை 10- இல் மற்றும் 11-இல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணைகளின்படி, தேனி மாவட்ட வருவாய் அலகில், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணியிடம் வழங்கப்பட்டு, 14.12.2022 பிற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார்.

தனியர் இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் பணியில் சேர்ந்த நாளான 14.12.2022 பிற்பகல் முதல் பணிவரன்முறை செய்திட அரசின் ஆணையை பெற்றுத் தரக் கேட்டு, சென்னை கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர் அவர்களுக்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டதில், கருணை அடிப்படையில், பணிநியமனம் பெற்றவர்களுக்கு பணிவரன்முறை செய்வது தொடர்பாக அரசால் தெளிவுரைகள் வழங்கப்பட்டு, அசல் முன்மொழிவுகள் சென்னை, வருவாய் நிருவாக ஆணையர் அலுவலகத்திலிருந்து மீளப் பெறப்பட்டுள்ளது.

அதன்படி, பணிவரன்முறை செய்வது தொடர்பாக , பார்வை (15) இல் காணும் கடிதத்தில், பத்தி எண் 6(III)- இல் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

.IIIபணியிடையே காலஞ்சென்ற அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு நியமன அலுவலர்களால் வழங்கப்படும் பணியினை , ஏனைய விதிகளைப் பூர்த்தி செய்யும் பட்சத்தில் பார்வை (13) இல் காணும் அரசு மனிதவளம் மேலாண்மைத்துறையின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களின்படி நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

இந்நேர்வில், பார்வை (13) - இல் காணும் கடிதத்தில் பத்தி எண்-3 மற்றும் 5 இல், பின்வருமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**3 ) The Services of the Government servants who are appointed or yet to be appointed, on Compassionate Grounds, shall be regularized as per the Tamil Nadu Civil Services (Appointment on Compassionate Grounds)Rule, 2023**

5) In view of the above rule position, hereinafter relaxation of Tamil Nadu Government Servants (Conditions of Services) Act, 2016 / Tamil Nadu Civil Services (Appointment on Compassionate Grounds) Rules, **2023 shall not be necessitated in respect of minimum age** , married daughter, unmarried brother sister of the unmarried deceased Government servant, to be appointed / appointed prior to commencement of the said Tamil Nadu Civil Services (Appointment on Compassionate Grounds) Rules, 2023.

However, relaxation shall arise to Tamil Nadu Civil Services (Appointment on Compassionate Grounds) Rules, 2023 for application submitted beyond three years, Maximum Age, Alternate application alone."

மேற்காணும் தெளிவுரையில், கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற்றவர்களின் பணியினை தமிழ்நாடு குடிமைப்பணிகள், (கருணை அடிப்படை

பணிநியமனம்) விதிகள் 2023 இல் வகுக்கப்பட்டுள்ள விதிமுறைகளின்படி பணிவரன்முறை செய்ய வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரி விண்ணப்பம் செய்த காலஞ்சென்ற அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்கள் குறும வயதினை நிறைவு செய்யாதிருப்பினும், தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம்–2016 மற்றும் தமிழ்நாடு குடிமைப்பணிகள் (கருணை அடிப்படை பணிநியமனங்கள்) விதிகள் 2023 ஆகியவற்றில் விதித்தளர்வு பெற வேண்டியதில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மாற்று விண்ணப்பம், பெரும வயது மற்றும் 3 ஆண்டு கால அளவை தாண்டிய விண்ணப்பங்கள் போன்ற நேர்வுகளில் மட்டுமே அரசிடமிருந்து விதித்தளர்வு பெற வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாணை 33.நிலை) எண்) தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு1–க்யூ))த் துறை, நாள்08.03.2023. ,தமிழ்நாடு குடிமைப்பணிகள், (கருணை அடிப்படை பணிநியமனம்) விதிகள் 2023 – இல் பணிவரன்முறை என்னும் தலைப்பில் பின்வருமாறு விதிகள் வகுக்கப்பட்டுள்ளது.

**16. Regularization of appointments.— Each appointing authority shall regularize the services of the person appointed under these rules within a period of one year from the date of his joining service, subject to eligibility.**

மேற்காணும் விதியில், பணியிடையே காலஞ்சென்ற அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு நியமன அலுவலர்களால் வழங்கப்படும் பணியினை ஏனைய தகுதிகளைப் பூர்த்தி செய்யும் பட்சத்தில், நியமன அலுவலரால் , பணி வரன்முறை செய்யப்படவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதாலும், பார்வை (9) இல் காணும் அரசாணையின்படி, கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரி விண்ணப்பம் செய்த நாளில் குறும வயதான 18 வயதினை பூர்த்தி செய்யாததால் தனியர் பொருட்டு அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள். 23.01.2020–க்கு விலக்களித்தும், தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 பிரிவு 58–இன் கீழ் ஆளுநர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம்–2016, பிரிவு 20(6)(டி)–ஐ தளர்வு செய்து அரசால் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளபடியாலும், மேற்காணும் தெளிவுரைகளின்படி, தனியரது பணியினை, இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் தனியர் பணியேற்பு செய்த நாளான, 14.12.2022 பிற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

Signed by
Sindhu Radhakrishnan
Date: 21-05-2024 14:07:16

**மாவட்ட ஆட்சியரின்**
**நேர்முக உதவியாளர்(பொது)**
**தேனி.**

பெறுநர் :
செல்வி.த.பத்மபிரியா,